நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஜீன் திங்கள் 15–ம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் : 928 / 2025

CNR.No.TNTT07-005150-2025

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| 1 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண்.147/2025 |
| 2 | புகார்தாரர் | தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர் |
| எதிரிகளின் விபரங்கள் | | |
| 3 | பெயர் | 1. சாமுவேல்ராஜ்<br>2. மாரிச்செல்வம்<br>3. பிரதீப் |
| 4 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | 1. இளங்கோ<br>2. வீரையா<br>3. பூபதிராஜா |
| 5 | வேலை | – |
| 6 | முகவரி | 1. சின்ன ஓடைப்பட்டி, சாத்தூர், விருதுநகர்.<br>2. வடக்கு தெரு, சின்ன ஓடைப்பட்டி, சாத்தூர், விருதுநகர்.<br>3. கிழக்கு தெரு, சின்ன ஓடைப்பட்டி, சாத்தூர், விருதுநகர். |
| 7 | வயது | 1. 34/2025<br>2. 28/2025<br>3. 27/2025 |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.15 18:53:04 +0530

| | | |
|---|---|---|
| | தேதி | |
| 8 | சம்பவம் | 30.03.2025 |
| 9 | புகார் | 05.04.2025 |
| 10 | எதிரியின் கைது விபரம் | எதிரிகள் கடந்த 31.03.2025 அன்று கைது செய்யப்பட்டுள்ளார்கள். |
| 11 | பிணை விபரம் | எதிரிகள் கடந்த 31.03.2025 அன்று காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். |
| 12 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 09.12.2025 |
| 13 | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 12.06.2026 |
| 14 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை BNS பிரிவுகள் 333, 296(பி), 131, 351(3) படியான இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை விடுதலை செய்து BNSS பிரிவு 271(1) கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி, அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 16 | காலதாமதத்திற்கான விளக்கம் | சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கு 10.11.2025 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 (பொறுப்பு), கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. J. பாரத்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 12.06.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.15 18:53:09 +0530

**தீர்ப்புரை**

**எதிரிகள் மீது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

1) 30.03.2025 ஆம் தேதி 22.20 மணிக்கு கோவில்பட்டி சத்தியபாமா தியேட்டரில் சாட்சி 1 செல்வகணேசன் படம் பார்க்க வரும் நபர்களை தியேட்டர் வாசலில் மது அருந்தி உள்ளார்களா என்று சோதனை செய்து உள்ளே அனுப்பும் போது, எதிரிகள் மூவரும் மதுபோதையில் படம் பார்க்க வந்துள்ளார்கள். அவர்களை சாட்சி 1 மது அருந்தியுள்ளதால் படம் பார்க்க அனுமதி இல்லை வெளியே செல்லுங்கள் என்று கூறியதற்கு எதிரிகள் மூவரும் சேர்ந்து சாட்சி 1யைப் பார்த்து ஏலே தேவிடியா மவனே கூதிமவனே என்று அசிங்கமாகப் பேசியும், சாட்சி 2 வசந்த திலீப், சாட்சி 3 சத்தியசீலன், சாட்சி 4 சுந்தர்ராஜா ஆகியோர் எதிரிகளை சத்தம் போட்ட போது, எதிரிகள் மூவரும் சேர்ந்து சாட்சி 1ன் சட்டையைப் பிடித்து கீழே தள்ளி காலால் சாட்சி 1ன் நெஞ்சில் மிதித்தும், கையால் இடது, வலது கன்னத்தில் மாறி மாறி அடித்து சாட்சி 1க்கு வலியை ஏற்படுத்தியும், சாட்சி 1யைப் பார்த்து ஏல புண்டமவனே இன்னொரு தடவை படம் பார்க்க வரும் பொழுது எங்களை தடுத்தால் உன்னை வெட்டிக் கொலை செய்து விடுவோம் என்றும், நீ எப்படி நாளைக்கு இங்க வேலை பார்க்கிற என்று பார்க்கிறோம், எங்கள் மூன்று பேருக்கும் கோவில்பட்டி காந்தி நகரில் ஆள் பழக்கம் உள்ளது, ஆள்களை வைத்து உன்னைக் குத்திக் கொன்றுபோடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது BNS பிரிவுகள் 296(பி), 131, 351(2) படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230ன் படி கடந்த 09.12.2025 அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், எதிரி மீது BNS பிரிவுகள் 333, 296(பி), 131, 351(3) படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் கடந்த 07.01.2026 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 18:53:15 +0530

வனைந்து BNSS பிரிவு 263ன் கீழ் வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்று கூறிக்கொண்டார்.

3) இந்த வழக்கில் எதிரிகளும், சாட்சி 1ம் சமாதானமாகி விட்டதாக BNSS பிரிவு 359–ன் கீழ் தாக்கல் செய்த எம்.பி. எண்.1/2026 என்ற மனுவானது எதிரி மீதான குற்றச்சாட்டுகளானது சமரசம் செய்ய முடியாத குற்றச்சாட்டுகள் என்பதால் இந்நீதிமன்றத்தால் கடந்த 08.06.2026 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

4) எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையான சான்றாவணங்களும் குறியிடப்பட்டன. இத்துடன் அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

**அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

5) அசா.1 செல்வகணேஷ், புகார் மனுவில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையது தான் என்று மட்டும் சாட்சியமளித்துள்ளார். அசா.2 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், சம்பவ காலத்தில் யார் அசா.1யை அடித்தார்கள் என்று தனக்கு தெரியவில்லை என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியமளித்துள்ளார். இந்த வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட BNSS பிரிவு 348–ன் கீழான எம்.பி.எண்.2/2026 என்ற மனுவானது கடந்த 09.06.2026 அன்று அனுமதிக்கப்பட்டு அசா.3 அங்குத்தாய் (உதவி ஆய்வாளர்) கூடுதல் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். கடந்த 31.03.2025 ஆம் தேதி 09.00 மணிக்கு பெண் தலைமை காவலர் கனகலட்சுமி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது அசா.1 செல்வகணேஷ் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த அசா.ஆ.2 புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 18:53:20 +0530

நிலைய குற்ற எண்.147/2025, BNS பிரிவுகள் 296(பி), 131, 351(2) ஆக அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

6) அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உதவி ஆய்வாளர் செந்தில்வேல்முருகன், 31.03.2025 ஆம் தேதி 01.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகேசன் மற்றும் சக்திமணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 31.03.2025 அன்று எதிரிகளைக் கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு சாட்சிய விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 05.04.2025 அன்று குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

7) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து 12.06.2026 அன்று BNSS 351(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**பிரச்சினையும், தீர்வும் :**

8) அரசுத் தரப்பில், எதிரிகள் அத்துமீறி நுழைந்து, அசிங்கமாகத் திட்டி, குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.15 18:53:25 +0530

9) மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகளைத் தண்டிக்க வேண்டும் என்றால் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். இந்நிலையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் நோக்கில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்ட புகார்தாரரான அ.சா.1 செல்வகணேஷ் தனது சாட்சியத்தில்

> "1.... ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவ காலத்தில் யார் என்னை அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையெழுத்து மட்டும் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை."

என்பதாக சாட்சியம் அளித்துள்ளாார். அசா.2 தனது சாட்சியத்தில்

> "1.... ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவ காலத்தில் யார் அசா.1யை அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை."

என்பதாக சாட்சியம் அளித்துள்ளாார்.

10) இந்நிலையில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் நோக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அசா.2 ஆகியோர் தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியமளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால், அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர் அவர்களது குறுக்கு விசாரணையிலும் அரசுத் தரப்புக்கு

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 18:53:31 +0530

ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேலும், அசா.1, எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டதாகக் கூறி எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளார். அரசுத் தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் அத்துமீறி நுழைந்து, அசிங்கமாகத் திட்டி, குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. இந்நிலையில் அ.சா.1, அசா.2 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யாத பட்சத்திலும், விசாரணை அதிகாரி சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகளைத் தண்டிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) முடிவில் அரசு தரப்பில் எதிரிகள் மீது BNS பிரிவுகள் 333, 296(பி), 131, 351(3) படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் அல்ல என BNSS பிரிவு 271(1)ன் கீழ் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டிலிருந்து எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் இல்லாததால் அதுகுறித்த உத்தரவில்லை.

13) இவ்வழக்கில் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் எழுதிக் கொடுத்துள்ள பிணைமுறிகளில் BNSS பிரிவு 481–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறிகள் தவிர மற்றவை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் BNSS பிரிவு 481ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.15 18:53:37 +0530

சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜீன் திங்கள் 15 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 18:53:43 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | திரு. செல்வகணேசன் | நிகழ்நிலை புகார்தாரர் சாட்சி |
| 2. | திரு. வசந்த திலீப் | கண்ணுற்ற சாட்சி |
| 3. | திருமதி. அங்குத்தாய் (உதவி ஆய்வாளர், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்) | புலன்விசாரணை குறித்து ஆவணங்கள் அடிப்படையில் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் | ஆவணத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | புகார் மனுவில் உள்ள அசா.1 ன் கையொப்பம் – 31.03.2025 | **அ.சா.1 – 08.06.2026** | **அசல்** |
| 2 | புகார் மனு – 31.03.2025 | **அ.சா.3 – 09.06.2026** | **அசல்** |
| 3 | முதல் தகவல் அறிக்கை – 31.03.2025 | **அ.சா.3 – 09.06.2026** | **அசல்** |
| 4 | பார்வை மகஜர் – 31.03.2025 | **அ.சா.3 – 09.06.2026** | **அசல்** |
| 5 | மாதிரி வரைபடம் – 31.03.2025 | **அ.சா.3 – 09.06.2026** | **அசல்** |

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 18:53:47 +0530

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்–** இல்லை

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 18:53:52 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி